## 8. ஒற்றுமையாய் வாழ்வோமே!

ஒரு உழவருக்கு நான்கு பசு மாடுகள் இருந்தன.
அவை மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்தன.
காலை வேளையில் மலைக் காட்டுக்குள் சென்று மேயும்.
மாலையில் தானாகவே வீட்டுக்கு வரும்.
அக்காட்டில் ஒரு சிறுத்தை வாழ்ந்தது.
அதற்கு இந்த மாடுகளை வேட்டை ஆடும் ஆசை வந்தது.
ஆனால் எப்போது அருகில் சென்றாலும் மாடுகள் ஒன்று சேர்ந்து கொம்பால் குத்தி விரட்டி விடும்.
அதனால் சிறுத்தையோ மிகவும் பயந்தது.
இருந்தாலும் மாடுகளைச் சாப்பிடும் ஆசை விடவில்லை.
அக்காட்டில் ஒரு நரியும் வாழ்ந்தது.
நரிக்கும் மாடுகளைத் தின்ன ஆசை.
சிறுத்தையும் நரியும் இணைந்தன, திட்டம் போட்டன.
ஒரு நாள் மாடுகள் நிதானமாகப் புல் மேயும் போது நரி தனித்தனியாய் மாடுகளை சந்தித்தது.
ஒரு மாட்டைப் பற்றி மற்றொரு மாட்டிடம் குறை கூறியது.
மாடுகளுக்குள் சண்டை உண்டாகி அவை பிரிய முயற்சி செய்தது.
மாடுகளும் நரி கூறியதைக் கேட்டுக் கொண்டன.
சில நாட்களில் மாடுகள் தனித் தனியே புல் மேயத் தொடங்கின.
சரியான சந்தர்பம் என அப்போது சிறுத்தை அங்கே வந்தது.
திடீரென நான்கு மாடுகளும் சிறுத்தையைச் சுற்றி வளைத்துத் தாக்கின.
கொம்புகளால் குத்தித் தூக்கி தூர வீசின.
சிறுத்தையோ "தப்பித்தோம் பிழைத்தோம்!" என்று வேறு இடத்துகே ஓடி விட்டது.
இதைப் பார்த்த நரி அதற்கு மேல் அங்கு நிற்குமா?
"யார் நம் மீது வீண் பழி கூறி பிரிக்க முயற்சி செய்தாலும் உண்மையான நண்பர்கள் அதை நம்ப மாட்டர்கள்!" என்று தங்களுக்குள் கூறிய மாடுகள் எப்போதும் போல் சந்தோஷமாய் வாழ்ந்தன.